3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***27287—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவங்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இதிலே ஒரு திருத்தம். உயர்நிலைப் பள்ளி பெண்களுக்காக 2015–ல் துவங்கப்பட்டு, 71 மாணவிகள் படித்து வருகிறார்கள். வருகின்ற ஆண்டில் இதைப்பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் அவருக்கு உற்ற*

2018 மார்ச் 19]

துணையாக இருந்து தமிழக அரசை வழி நடத்தி வரும் தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசு சிறப்பாக நடைபெறுவதற்கு உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு எந்த அளவுக்குச் சிறப்பு செய்தார்களோ அதே அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையில் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காகப் பாடுபட்டுவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியானது 2015 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாகவும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகவும் செயல்பட்டு வருகின்றது. அந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற பெற்றோர்களும், மாணவர்களும் தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்து, அதற்கான நிதியாக 2 இலட்சம் ரூபாயை அரசு கஜானாவிலே செலுத்தியுள்ளார்கள். பொதுமக்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டே தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்றத் தொகுதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு வித்திட்ட தொகுதி என்ற முறையில் இந்த ஆண்டே அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி வட்டத்தைச் சார்ந்த வேலம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆயிரம் மாணவர்களுக்கும் அதிகமானோர் படித்து வருகிறார்கள். அந்த மேல்நிலைப் பள்ளியை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியென்றும், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியென்றும் இரண்டாகப் பிரித்துத் தர அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போச்சம்பள்ளியிலுள்ள பள்ளியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இருபாலர் படிக்கும் மேல்நிலைப் பள்ளியென்று இருந்தால், அதனைப் பிரிப்பது என்பது இயலாத சூழ்நிலையாகும். ஏனென்று சொன்னால், விதிகளுக்குட்பட்டு, உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் மட்டும்தான் அதனைப் பிரிக்க இயலும். ஆகவே, உறுப்பினர் தொகுதியில் உயர்நிலைப் பள்ளி ஏதேனும் இருந்தால் அதனை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு விதிகளுக்குட்பட்டு இந்த ஆண்டு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏதேனும் உயர்நிலைப் பள்ளியில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகம் இருப்பின் விதிகளுக்குட்பட்டு அடுத்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செந்தூர் செந்தில் முருகன் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 985 மாணவிகளும், 41 ஆசிரியர்களும் உள்ளனர். அந்தப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது. வகுப்பறைக் கட்டடங்கள்

2018 மார்ச் 19]

போதுமானதாக இல்லை. அந்தப் பள்ளியின் மேற்குப் பகுதியில் சேதமடைந்துள்ள ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு மாடியுடன் கூடிய கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியின் ஒரு பகுதி கூரைக் கட்டடமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளியை நபார்டு திட்டத்தின்கீழ் இணைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

துணை மின் நிலையம்

***5533—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதியில் 11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பத்தூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் வேண்டும்